பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 05 2025 **THURSDAY** **7.15 PM**

## தலைப்புச் செய்திகள்

1. தீவிரவாதத்தை முற்றிலுமாக வேரறுக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவுக்கு, அமெரிக்கா துணை நிற்கும் என்று அந்நாட்டு அமைச்சர், திரு ராஜ்நாத் சிங்கிடம் உறுதியளித்துள்ளார்.

3. நாட்டின் நிலக்கரி உற்பத்தி கடந்த மாதத்தில் மூன்று புள்ளி ஆறு மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கு 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 99 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

5. சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Ankur Bhattacharjee** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>

நாடு முழுவதும் தீவிரவாதம் முற்றிலுமாக வேரறுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்திற்கு எதிராக உறுதியான பதிலடி கொடுக்கும் என்று கூறினார்.

தீவிரவாதிகளுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்த அவர், கோழைத்தனமான தாக்குதல் தங்களுக்கு கிடைத்த வெற்றி என யாராவது கருதினால் அதற்கு பதிலடி நடவடிக்கைகள் ஒவ்வொன்றாக எடுக்கப்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் எந்த மூலையில் தீவிரவாதம் தலையெடுத்தாலும், அதனை முழுவதுமாக அழிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தையடுத்து, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Pete Hegseth**-ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எல்லை கட்டுப்பாட்டு கோட்டுப்பகுதியில் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும், இந்தியா அதற்கு தக்க பதிலடி கொடுத்து வருவதாகவும் அமெரிக்க அமைச்சரிடம் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது.

இந்த உரையாடலின்போது, பஹல்காமில் அப்பாவி மக்கள் உயிரிழந்திருப்பது குறித்து அமெரிக்க அமைச்சர் இரங்கலை தெரிவித்ததாகவும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்றும், தீவிரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவின் பக்கம் அமெரிக்கா நிற்கும் என்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்காக தேசிய புலனாய்வு முகமையான **NIA** தலைமை இயக்குனர் திரு **Sadanand Date** அங்கு விரைந்துள்ளார்.

கடந்த 22-ஆம் தேதி பஹல்காமில் நடத்தப்பட்ட தாக்குதலில் 26 பேர் உயிரிழந்த நிலையில், அதுகுறித்த விசாரணை **NIA** -விடம் ஒப்படைக்கப்பட்டது.

தாக்குதலின் தீவிர தன்மை குறித்து விசாரணை நடத்துவதற்கு ஏதுவாக, **NIA** விசாரணைக்கு உள்துறை அமைச்சகம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, பாகிஸ்தானிலிருந்து செயல்படும் லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பின் பிரிவான **‘TRF’**-க்கு எதிராக என் ஐ ஏ முறையான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது.

ஏற்கனவே, தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிக்கு என் ஐ ஏ அதிகாரிகள் சென்று விசாரணை நடத்திய நிலையில், தற்போது அதன் தலைமை இயக்குனரும், பஹல்காம் சென்றிருப்பது விசாரணையை மேலும் விரைவுப்படுத்தும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

பஹல்காம் தாக்குதல் குறித்து விசாரிக்க நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

பஹல்காமில் 26 பேர் உயிரிழக்க காரணமான தாக்குதல் சம்பவம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என தொடரப்பட்ட மனுவுக்கு நீதிபதி திரு சூரியகாந்த் தலைமையிலான அமர்வு கடும் அதிருப்தி தெரிவித்தது.

இதுபோன்ற மனுவை தாக்கல் செய்வதற்குமுன் மனுதாரர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும், நமது பாதுகாப்புப்படையினரின் மனஉறுதியை குலைக்கும் வகையில் எந்த உத்தரவையும் பிறப்பிக்க இயலாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

மேலும், இந்த மனுவை திரும்பப்பெறுமாறு கேட்டுக்கொண்ட நீதிபதிகள், தீவிரவாதத்திற்கு எதிரான போரில் நாட்டில் உள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று தெரிவித்தனர்.

**<<<<<>>>>>**

நாட்டின் நிலக்கரி உற்பத்தி கடந்த மாதத்தில் மூன்று புள்ளி ஆறு மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நிலக்கரித்துறையில் தொடர் விநியோகம் மற்றும் செயல்பாட்டு ஸ்திரத்தன்மையை அரசு உறுதி செய்ததன் காரணமாக இந்த வளர்ச்சி எட்டப்பட்டிருப்பதாக அந்த அமைச்சத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

ஒட்டுமொத்த நிலக்கரி உற்பத்தி கடந்த மாதத்தில் 81 புள்ளி ஐந்து ஏழு மெட்ரிக் டன் என்றும், இது கடந்த ஆண்டு இதே மாதத்தில் 78 புள்ளி ஏழு ஒன்று மெட்ரிக் டன்னாக இருந்தது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியில், 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 99 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் இந்த திட்டத்திற்கான இயக்குனர் திரு சஞ்சய் குமார் வெளியிட்ட அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு நிதி விடுவிக்கப்பட்டதற்கான தகவல் மத்திய அரசிடமிருந்து, மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், ஊரகப்பகுதிகளில் இந்த திட்டத்தின்கீழ் பணியாற்றிய தொழிலாளர்கள் நிம்மதி அடைவார்கள் என்றும் திரு சஞ்சய் குமார் அதில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<>>>>>**

பஞ்சாப் மாநிலம், **Amritsar**-ல் தீவிரவாதிகளின் சதியை எல்லைப் பாதுகாப்புப் படையினர் முறியடித்தனர்.

உளவுத்துறைக்கு கிடைத்த தகவலின் பேரில் **Bharopal** கிராமத்திற்கு அருகே நேற்றிரவு பாதுகாப்புப் படையினர் நடத்திய சோதனையில் ஆயுதங்கள், வெடிமருந்துகள், கையெறி குண்டுகள், சிறியரக துப்பாக்கிகள், அவற்றில் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக பஞ்சாப் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

மத்திய பணியாளர் தேர்வாணையமான **UPSC-** யின் உறுப்பினராக பீகாரை சேர்ந்த ஐ ஏ எஸ் அதிகாரி திருமதி சுஜாதா சதுர்வேதி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

பீகார் மாநிலத்திலும், மத்திய அரசிலும் பல்வேறு பதவிகளை வகித்த அவர், அண்மையில் **UPSC** உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஆறாண்டுகள் அல்லது 65 வயது வரை திருமதி சுஜாதா சதுர்வேதி இந்த பதவியில் இருப்பார் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேச மாநிலத்தில் கடந்த 3 ஆண்டுகளில், மூவாயிரத்து 400 பெண்கள் மற்றும் சிறுமிகள் காணாமல் போயிருப்பதாக வெளியான தகவல் குறித்து பதிலளிக்குமாறு அம்மாநில தலைமைச்செயலாளர் மற்றும் காவல்துறை தலைவருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஊடகங்களில் வெளியான தகவல்களின் அடிப்படையில் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தேசிய மனித உரிமைகள் ஆணையம், ஆறு வயது சிறுமி போபாலில் மாயமாகி 18 நாட்கள் ஆனபிறகும் அதுகுறித்த எந்த தகவலும் காவல்துறையிடம் இல்லாததை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபோன்ற பல நிகழ்வுகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படாதது குறித்து இரண்டு வாரங்களில் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்று அந்த நோட்டீஸில் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

<<<<<>>>>>

கோடை வெயிலின் தாக்கத்தை கருத்தில் கொண்டு, கட்டுமான தொழிலாளர்களுக்கு நண்பகல் 12 மணி முதல் 3 மணிவரை ஓய்வு அளிக்க கட்டுமான நிறுவனங்களுக்கு தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா உத்தரவிட்டுள்ளார்.

தொழிலாளர் தினத்தை ஒட்டி புதுதில்லியில் கட்டுமானத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய அவர், மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் உள்ள பிஜேபி, தொழிலாளர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க உறுதிபூண்டிருப்பதாக கூறினார்.

கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் தங்கியிருக்கும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை வழங்குவதற்கு கட்டுமான நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாங்காக்கில் நடைபெற்றுவரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Ankur Bhattacharjee** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 8-11, 6-11, 11-7, 12-10, 11-6 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Choi Jiwook –** ஐ வென்றார்.

--------------

உலக இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------------

ஜோர்டனின் அம்மானில் நடைபெற்ற ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா 15 தங்கம் உட்பட 43 பதக்கங்களை வென்றது.

-----------------

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிக்கான இறுதியாட்டம் லண்டன் லாட்ஸ் மைதானத்தில் அடுத்த ஆண்டு ஜூலை மாதம் 5-ஆம்தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>